FWC

**யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்**
**தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்**

# Field Work Centre
# தவணைப் பரீட்சை, யூன் - 2016
# Term Examination, June - 2016

| தரம் :- 13 (2016) | சித்திரக்கலை – I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

சுட்டெண் : ..................................

அறிவுறுத்தல்கள் :
- ❖ இவ்வினாத்தாள் இரண்டு பகுதிகளைக் கொண்டுள்ளது.

பகுதி - I
- ➢ எல்லா வினாக்களுக்கும் இவ்வினாத்தாளிலேயே விடையளிக்குக.
- ➢ ஒவ்வொரு வினாவுக்குமுரிய சரியான விடையைத் தெரிவு செய்து, அதன் இலக்கத்தை எதிரே உள்ள புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.

பகுதி - II
- ➢ மூன்று உப பகுதிகளைக் கொண்டது.
- ➢ ஒரு உப பகுதியிலிருந்து ஒரு வினா வீதம் தெரிவு செய்து, மூன்று வினாக்களுக்கு விடை எழுதுக.
- ❖ பகுதி I, பகுதி II, ஆகியவற்றின் விடைத்தாள்களை ஒன்றாக இணைத்துக் கையளிக்குக.

| பரீட்சகரின் உபயோகத்திற்கு மட்டும் | |
|---|---|
| வினாத்தாள் I | |
| பகுதி | புள்ளி |
| I | |
| II | |
| மொத்தம் | |

## பகுதி - I

❖ 1 தொடக்கம் 5 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைக் கீழே தரப்பட்டுள்ள *A, B, C, D, E* ஆகிய செதுக்கல்களிலிருந்து தெரிவு செய்க.


*A*


*B*


*C*


*D*


*E*

01) *A* என்ற படைப்பானது பைசாத்திய கலைமரபிற்கு உரியதாகும். இதன் ஊடக பாவனையானது
(1) பிரஸ்கோ சீக்கோ எனப்படும்.
(2) பிரஸ்கோ புவனோ எனப்படும்
(3) மொசாய்க் எனப்படும்.
(4) டெம்பிரா எனப்படும்.
(5) டெறக்கொட்டா எனப்படும். (.......)

02) *B* என்ற படைப்பானது பிக்காசோவில் பிரபல்யமான குவர்ணிக்கா ஓவியமாகும். இதன் ஊடகப் பாவனையானது
(1) நீர்வர்ணமும் தைலவர்ணமும் கலந்து செய்யப்பட்டது.
(2) கொலாச் முறையும் தைலவர்ணமும் கலந்து செய்யப்பட்டது.
(3) மொசாய் முறையும் தைலவர்ணமும் கலந்து செய்யப்பட்டது.
(4) டெம்பிலேட் முறைமையில் மாத்திரம் செய்யப்பட்டது.
(5) ஒரு வகையான டெம்ராவர்ணங்கள் பசையோடு கலந்து பயன்படுத்தி செய்யப்பட்டது. (.......)

03) $C$ என்ற படைப்பானது கொழும்பு றோயல் கல்லூரி நவரங்கலா மண்டபத்தில் காணப்படுகிறது. இதன் ஊடகமானது

(1) மொசாய் எனப்படும்.

(2) ரெக்கொட்டா எனப்படும்.

(3) பிரஸ்கோ புவனோ எனப்படும்.

(4) பிரஸ்கோ சீக்கோ எனப்படும்.

(5) டெம்பரா எனப்படும். (.......)

04) $D$ என்ற படைப்பானது அஜந்தா குகையில் காணப்படும் ஓவியமாகும். இதன் ஊடகமானது

(1) பிரஸ்கோ புவனோ எனப்படும்.

(2) பிரஸ்கோ சீக்கோ எனப்படும்.

(3) பாறைச் சுவரில் இயற்கை வர்ணத்தால் தீட்டுதல் எனப்படும்.

(4) புடைவை ஊடகமான பெத்திகட எனப்படும்.

(5) சையிரஸ் கியுரோ எனப்படும். (.......)

05) $E$ என்ற படைப்பானது இலங்கையில் 43 வது குழுவில் உறுப்பினராக றிச்சட் கப்பிரியலின் ஆக்கமாகும். இவ் ஆக்கம் உருவாக்கப்பட்ட ஊடகம்

(1) மரம்

(2) கருங்கல்

(3) வெண்கலம்

(4) உருக்கு

(5) பைப்பர் கிளாஸ் (செயற்கை களி) (.......)

06) தென் இந்தியாவின் விஜய நகரக் கட்டிடக் கலைப் பாணியினை விளக்கமாகக் காணக்கூடிய கம்பளை காலத்துக்குரிய கருங்கல் கட்டிடக்கலை நிருமாணிப்பானது

(1) கல்மடுவ விகாரை

(2) தெகல்தொறுவ விகாரை

(3) கடலதெனிய விகாரை

(4) எம்பக்கே தேவாலயம்

(5) இலங்காதிலக விகாரை (.......)

07) செங்கல் சுண்ணாம்புக் கலவை கொண்டு கட்டப்பட்ட கம்பளை காலத்துக்குரிய விகாரைகளிடையே சுவரில் வெளித்தள்ளிய தூண் அமைப்புக்களையும், யானைத் தலை, மகரதோரணம் ஆகியவற்றால் அழகுற அலங்கரிக்கப்பட்டும் நிருமாணிக்கப்பட்டுள்ள விகாரையானது

(1) கடலதெனிய விகாரை

(2) கல்மடுவ விகாரை

(3) இலங்காதிலக விகாரை

(4) ரிதி விகாரை

(5) கங்காரம விகாரை (.......)

08) இந்திய சாஞ்சி தோரணவாயில் செதுக்கல்களின் இயல்புகளில் வெளிக்காட்டப்படாத அம்சம்

(1) கதையின் முக்கிய பகுதிகள் செதுக்கப்பட்டுள்ளமை

(2) உருவங்களில் அசைவுகள் புலப்படுதல்

(3) புத்தருக்குப் பதிலாக குறியீடுகள் காட்டப்பட்டிருத்தல்

(4) இடைவெளிகள் வெறுமனே நிரப்பாதுவிட்டிருத்தல்

(5) உயிரோட்டமான தன்மை காணப்படல் (.......)


09) இந்தியாவில் புத்தருக்கு முதன் முதலில் உருவம் கொடுத்த கலைமரபினர்


(1) மதுரா கலைமரபு
(2) குப்த கலைமரபு
(3) மௌரிய கலைமரபு
(4) காந்தாரக் கலைமரபு
(5) சோழக் கலைமரபு ( ....... )


10) உரோமக் கலைஞர்கள் ஆரம்ப காலத்தில் கிரேக்க கலை ஆக்கங்களைப் பின்பற்றினாலும் பிற்காலத்தில் சில அம்சங்களில் கிரேக்கரையும் மிஞ்சும் வகையில் இருந்ததாக விமசகர்கள் குறிப்பிடுவது

(1) வெற்றி வாகையை வெளிப்படுத்துகின்ற செதுக்கல் கலை ஆக்கங்களை நிருமாணிப்பதில்
(2) சமயத் தேவைகளின் பொருட்டு பெரிய மாளிகைகளை நிருமாணிப்பதில்
(3) தனிநபர் தனித்துவத்தையும், குணப்பண்புகளையும் வெளிப்படுத்தும் தலைச் சிற்பங்களை நிர்மாணிப்பதில்
(4) மாளிகையினுள் பிரஸ்கோ ஓவியங்களை வரைவதில்
(5) மனித உடற் பிரமாணத்தில் வெங்கலச் சிலைகளை நிருமாணிப்பதில் ( ....... )


❖ **11 தொடக்கம் 15 வரையுள்ள வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைக் கீழே தரப்பட்டுள்ள P, G, H, I ஆகிய ஒளிப்படங்களிலிருந்து தெரிவு செய்க.**


F


G


H


I


J

11) கண்மட்டத்தின் கீழே காணப்படுகின்ற படக் குறிப்புகளானது

(1) F, G, H (2) G, H, I (3) F, H, I (4) G, I, J (5) H, I, J ( ....... )

12) கண்மட்டத்திற்கு கீழேயும் மேலேயும் காணப்படுகின்ற படக் குறிப்பானது

(1) H (2) I (3) J (4) F (5) G ( ....... )

13) கண்மட்டத்தின் மேலே காணப்படுகின்ற படக் குறிப்பானது

(1) F (2) G (3) H (4) I (5) J ( ....... )

14) தூரதரிசனப் பண்பைச் சரியாக வெளிக்காட்டுகின்ற குறிப்புகள்

(1) F, G, I (2) G, H, I (3) G, I, J (4) H, I, F (5) I, J, H ( ....... )

15) கோட்பாடுகளுக்கு பொருந்தாத படக் குறிப்பானது

(1) F (2) G (3) H (4) I (5) J ( ....... )

16) 18 ஆம் நூற்றாண்டில் மலைநாட்டு விகாரைகளுடன் தொடர்புற்ற வகையில் புதியதொரு சித்திரக்கலை ஆரம்பிக்கப்பட்டதன் நோக்கம்

(1) பார்ப்போரிடம் உயர்தரமான கலை ரசனை மனப்பாங்கொன்றை உருவாக்குதலாகும்.

(2) மிக இலகுவாக பௌத்தர்களிடம் பக்தியையும் பௌத்த குணப்பண்புகளையும் தோற்றுவித்தலாகும்.

(3) பழமையான நுட்பமுறைகளை நீக்கிவிட்டு புதிய நுட்பமுறைகளை அறிமுகம் செய்தலாகும்.

(4) விகாரைச் சித்திரக்கலையை புதிய பாதையில் உயர்மட்டத்திற்கு கொண்டு வருதலாகும்.

(5) விகாரைகளுக்கு பௌத்தர்களைக் கவர்ந்திழுத்துக் கொள்ளலாகும். (.......)

17) மொகலாயக் கலைக்கு அரச ஆதரவு கிடைக்கப் பெற்ற சீரற்ற அரசியல் ஆட்சிக்காலம்

(1) குமாயன் காலம்

(2) அக்பர் காலம்

(3) ஜஹாங்கீர் காலம்

(4) ஷாஜகான் காலம்

(5) அவுறங்கசீப் காலம் (.......)

18) பாரதத்தில் புத்தர் சரிதைகளைச் சித்தரிக்கும் செதுக்கல் ஆக்கங்களுக்கிடையே சிக்கலான ஒழுங்கமைப்புத் தன்மையையும் பாவத்துடன் கூடிய உணர்வு வெளிப்பாட்டையும் சித்தரித்த பெருமைக்குரியோர்

(1) காந்தாரக் கலைஞர்கள்

(2) மதுராக் கலைஞர்கள்

(3) மௌரியக் கலைஞர்கள்

(4) அமராவதிக் கலைஞர்கள்

(5) சுங்கக் கலைஞர்கள் (.......)

19) மகாபலிபுரத்தில் உள்ள கங்கையின் இறக்கம் (கங்காவறோகன) என்னும் செதுக்கல் மூலம் சித்திரிக்கப்படுவது

(1) மனிதர்களும் பிராணிகளும் நீராடும் சந்தர்ப்பமாகும்.

(2) அர்ஜுனன் சிவபெருமானால் சாபத்திலிருந்து விடுவிக்கப்படுதலாகும்.

(3) நீரைப் பெற்றுக்கொள்ளும் வரலாற்றுத் தகவல் கூறப்படுதலாகும்.

(4) மகாபாரதத்தில் குறிப்பிடப்படும் வழிபாட்டுக்குரிய கங்கை எனப்படும் நதி உருவாகின்ற தன்மையாகும்.

(5) தேவர்களும் மனிதர்களும் இணைந்து நீரைப் பூஜை செய்தலாகும். (.......)

20) பிரசித்தி பெற்ற சாராநாத் புத்தர் சிலையில் வெளிப்படுத்தப்படுவது

(1) மாத்துரு திவ்விய ராஜாவிற்கு தர்மபோதனை செய்யும் சந்தர்ப்பம்

(2) இயமனைத் தோற்கடித்து புத்தரான சந்தர்ப்பம்

(3) பஸ்வக தபசிகளுக்கு தர்ம போதனை செய்யும் சந்தர்ப்பம்

(4) தியான சுகத்தில் அமர்ந்து இருத்தல்

(5) நம்மசு பூங்காவில் ஞானம் பெறுதல் (.......)

21) 

அருகில் காட்டப்பட்டுள்ள அலங்கார வர்ணச் சித்திரம்

(1) நவீன பாணியிலான சுதந்திரமான வடிவமைப்புக்களைப் பயன்படுத்திச் செய்யப்பட்ட நிர்மாணிப்பாகும்.

(2) சுமண திசாநாயக்கவினால் நிர்மாணிக்கப்பட்ட பத்திக் அலங்காரம் ஆகும்.

(3) $L.T.P.$ மங்சுரீயினால் நவீன பாணியிலான வடிவமைப்புக்களைக் கொண்டு ஆக்கப்பட்ட வாழ்த்துமடலாகும்.

(4) சுமண திசாநாயக்க சிறுவர் நூல் ஒன்றிற்காக வரைந்த கதை விளக்கச் சித்தரமாகும்.

(5) பத்திக் முறையில் தற்காலக் கலைஞர் ஒருவரால் செய்யப்பட்ட புதியதொரு நிர்மாணிப்பாகும். (.......)

22) 

அருகில் காட்டப்பட்டுள்ள பொருட்கூட்டச் சித்திரம்

(1) தற்காலச் சித்திரக் கலைஞர் ஒருவரின் அசையாப் பொருட்கூட்ட ஒழுங்கிணைப்புச் சித்திரமாகும்.

(2) பொருட்களின் இயல்பான தன்மைகளை கருத்திற் கொள்ளாது செய்யப் பட்டவொரு நிர்மாணிப்பாகும்.

(3) சுதந்திரமான ஒழுங்கமைப்பு முறையில் நிர்மாணிக்கப்பட்டவொரு பொருட் கூட்டப் படவாக்கமாகும்.

(4) $W.I.G.$ பீலின் என்ற கலைஞரால் நவீன வடிவமைப்புக்களைப் பயன்படுத்தி வரையப்பட்ட ஒரு சித்திரமாகும்.

(5) ஜோர்ஜ் கீட்டினால் கனவடிவவாத எண்ணக்கருவைக் கொண்டு செய்யப்பட்ட ஒரு நிர்மாணிப் பாகும். ( .......)

23) 

அருகில் காட்டப்படுள்ள சித்திரம்

(1) இந்திய மக்களின் மரபுரீதியான வாழ்க்கைப் பண்புகளை வெளிப்படுத்தும் ஜெமினி றோயின் சித்திரமாகும்.

(2) அமிர்தா சேர்கிலினால் வரையப்பட்ட ‘மூன்று பெண்கள்’ என்னும் பெயரால் அறியப்படும் சித்திரமாகும்.

(3) இந்திய நவீன கலைஞர் ஒருவரின் ‘மணப்பெண்’ எனப்படும் புதிய படைப்பாகும்.

(4) ‘மலைநாட்டு மங்கையர்’ என்னும் பெயரிலான நந்தலால் போஸ்சின் நிர்மாணிப்பாகும்.

(5) இந்திய மக்கள் வாழ்க்கையை விளக்குகின்ற அபனிந்த்ரநாத் தாகூரின் சித்திரமாகும். ( .......)

24) 

இச்சித்திரத்தை ஒழுங்கிணைக்கும் பொழுது கையாண்டிருக்கும் விசேஷ முறையானது

(1) தூரதரிசனத்தை அடிப்படையாகக் கொண்டு வடிவங்களை சுதந்திரமாக கையாண்டிருத்தல்

(2) வர்ணத் தடங்களுக்கு முன்னிடம் அளித்து இரேகையை கவனியாது விடல்

(3) தளத்தின் மத்தியை இலக்காக வைத்து வடிவங்களைப் படவாக்கம் செய்திருத்தல்

(4) சித்திரப் பரப்பில் கூடிய அளவு வடிவங்களைப் பயன்படுத்தி இருத்தல்

(5) யதார்த்தத்திற்கு முதலிடம் அளிப்பதன் மூலம் தொனிப் பொருளை வெளிப்படுத்தியிருத்தல் ( .......)

25) 

அருகில் காட்டப்பட்டுள்ள செதுக்கல்

(1) மரச்சட்டகம் ஒன்றின் மீது செய்யப்பட்ட பழமையான செதுக்கலாகும்.

(2) பனாவிட்டிய அம்பலத்தின் மரச்சட்டகச் செதுக்கலாகும்.

(3) எம்பக்க அம்பலத்தின் மரச்சட்டகச் செதுக்கலாகும்.

(4) எம்பக்க தேவாலயத்தின் மரச்சட்டகச் செதுக்கலாகும்.

(5) மரச்சட்டகம் ஒன்றின்மீது செய்யப்பட்டுள்ள புதியதொரு புனைவு நிர்மாணிப்பாகும். ( .......)

26) அஜந்தாவுக்கும் எல்லோராவுக்கும் இடையே காணப்படும் ஒத்த தன்மை அல்லாத அம்சம்

(1) இரண்டிடத்திலும் பாறையைக் குடைந்து செய்யப்பட்ட வழிபாட்டு ஸ்தானம் காணப்படுவதால்

(2) இரண்டிடத்திலும் குகை சித்திரக்கலையால் அலங்கரித்திருப்பதனால்

(3) இரண்டிடத்திலும் பௌத்த சமய வழிபாட்டு ஸ்தானம் இருந்ததனால்

(4) இரண்டிடத்திலும் பாறையை வெட்டி தயாரிக்கப்பட்ட வழிபாட்டிடம் உள்ளதால்

(5) இரண்டிடத்திலும் செதுக்கல்கள் காணப்படுகின்றமையால் ( .......)

27) அவிக்னோ யுவதிகள் என்னும் ஓவியத்தின் சிறப்பியல்பு
(1) அழகிய, அழகற்ற பெண்களைச் சமூகம் ஏற்றுக் கொள்வதைப் பற்றி விமர்சித்தல்
(2) விபசாரிகளின் துன்பம் நிறைந்த வாழ்க்கையைப் பற்றி விளக்குதல்
(3) விபசாரிகள் பற்றிய சமூகத்தின் வரவேற்பை விமர்சித்தல்
(4) பகுப்பாய்வுக் கனவடிவாத எண்ணக் கருவை இனங்காணல்.
(5) சகல அழகிய பெண்களும் இறுதியில் அழகை இழப்பர் எனப் பிரகடனப்படுத்துதல் (.......)

28) 43 வது குழுவின் கலைஞர்களில் சிலை, கார்ட்டூன் நிழல்படம் ஆகியவற்றில் திறமையை காட்டிய கலைஞர்கள்
(1) ஒப்ரிகொலட், றிச்சட் கப்ரியேல், லயனல் வென்ற்
(2) டேவிட் பெயின்ரர், லயனல் வென்ற், தரனியாகல
(3) கொல்ட் ஒபரிகொலட், றிச்சட் கபிரியேல், மஞ்சுசிறி
(4) மஞ்சுசிறி, தரனியாகல, லயனல் வென்ற்
(5) லயனல் வென்ற், றிச்சட் கப்ரியேல், ஜோர்ஜ்கீற் (.......)

29) ஐரோப்பிய நாகரீகத்தின் தொட்டில் எனக் கிரேக்க நாகரீகம் கருதப்படுகிறது. மேற்படி இக்கலைமரபு உருவாக முக்கிய காரணமாகக் கொள்ளக்கூடியது
(1) ஜனநாயக ஆட்சிமுறையும் கலைஞருக்கு வழங்கப்பட்ட சுதந்திரமும்
(2) சலவைக்கல் அதிகளவில் காணப்பட்டமை
(3) மக்களுக்குக் கலை மீதான நாட்டம் அதிகரித்தமை
(4) மத குருக்களுக்கும், மத நம்பிக்கைகளுக்கு முக்கியமளித்தல்
(5) ஏனைய நாகரீகத்தினரின் செல்வாக்கு அதிகமானமை (.......)

30) மொசைக் அலங்காரத்தின்முன்னோடி இடமான பைசாந்தியத்தில் இக்கலைமரபு உருவானதன் அடிப்படை நோக்கம்
(1) மதத்தைப் பரப்புவதற்காகும்.
(2) மொசைக் அலங்காரத்தை விரிவுபடுத்துவதற்காகவாகும்.
(3) சக்ரவர்த்திகளின் கீர்த்தீயையும், தெய்வீகத்தையும் பிரதிபலிப்பதாகும்.
(4) பிரேதசாலைகளை அழகுபடுத்துவதற்காகவாகும்.
(5) கண்ணாடிகளின் பாவனையை அதிகரிப்பதற்காகவாகும். (.......)

❖ **31 தொடக்கம் 35 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் மிகச் சரியான விடையை $F, G, H, I, J$ ஆகியவற்றால் கீழே காட்டப்பட்டுள்ள சிலைகளை அடிப்படையாகக் கொண்டு தெரிவு செய்க.**



*F*



*G*



*H*



*I*



*J*

31) $F$ எழுத்தினால் காட்டப்பட்டுள்ள பாரதத்தின் காந்தார தேசத்தில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலை

(1) தக்திபஹி புத்தர் சிலையாகும்.

(2) ஹோட்டிமந்தார் புத்தர் சிலையாகும்.

(3) சஹ்ரி பக்லொல் புத்தர் சிலையாகும்.

(4) பிரெகம் புத்தர் சிலையாகும்.

(5) கிரேக்க கிறிஸ்துதேவ புத்தர் சிலையாகும். ( .......)

32) $G$ எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிற்பமானது

(1) இலங்கையின் உலோக நிர்மாணக் கலைஞர் ஒருவரின் நிர்மாணிப்பாகும்.

(2) பிரசித்திபெற்ற சிற்பக் கலைஞரான றிச்சர்ட் கேபிறியலின் நிர்மாணிப்பாகும்.

(3) இலங்கையின் சிற்பக் கலைஞரான திஸ்ஸ ரணசிங்கவின் நிர்மாணிப்பாகும்.

(4) நவீன சிற்பக் கலைஞரான ஆரியவங்ச வீரக்கொடியின் நிர்மாணிப்பாகும்.

(5) கடினச் செயலை எடுத்துக்காட்டும் டெராகொட்டா சிலையாகும். ( .......)

33) $H$ எழுத்தினால் காட்டப்பட்டுள்ள புத்தர் சிலை

(1) பராக்கிரமபாகு மன்னனின் ஆட்சிக் காலத்தில் நிர்மாணிக்கப்பட்ட ஆலாஹன பிரிவெனாவிற்குரிய உத்தாராம விகாரையின் சிலையாகும்.

(2) பொலன்னறுவையில் காணக்கூடிய சயனநிலை சிலைகளுள் முக்கியமான சிலையாகும்.

(3) பல்லவர்களின் சிலைப் பண்புகளைக் கொண்டதாக இந்தியச் சிற்பிகளால் நிர்மாணிக்கப் பட்டதாகும்.

(4) நிஸ்சங்கமல்ல மன்னனின் பௌத்த கலை நிர்மாணிப்புகளில் ஒன்றாகும்.

(5) பொலன்னறுவையிலுள்ள கற்சிலைகளுள் பரிநிர்வாணத்தைக் காட்டும் முதன்மையான நிர்மாணிப்பாகும். ( .......)

34) $I$ எழுத்தினால் காட்டப்பட்டுள்ள சிலை

(1) கனவடிவ வாதக் கலைஞர் ஜோர்ஜ் பிராக்கின் நிர்மாணிப்பாகும்.

(2) கணவடிவ வாதக் கலைஞர் பிக்காசோவின் நிர்மாணிப்பாகும்.

(3) அரூபவாத சிற்பக் கலைஞரான ஒகஸ்தே ரொடீனின் நிர்மாணிப்பாகும்.

(4) மனப்பதிவுவாதியான எட்கா டெகாவின் நிர்மாணிப்பாகும்.

(5) மனப்பதிவுவாதியான குளோட் மொனேயிள் நிர்மாணிப்பாகும். ( .......)

35) $J$ எழுத்தினால் காட்டப்பட்டுள்ளது

(1) எளிய ஆக்கபூர்வமான உருவங்கள் பயன்படுத்தப்பட்டுள்ள புனைச் சிலையாகும்.


(2) அரூபவாத சிற்பக் கலைஞர் ஹென்றிமூவரின் 'தாய்' என்ற பெயரிலான நிர்மாணிப்பாகும்.

(3) தாவரவியல் (பூங்கா) சிலையொன்றுக்காக நிர்மாணிக்கப்பட்டதாகும்.

(4) ஒகஸ்தே ரொடீனின் புனைவுச் சிலையாகும்.

(5) ஹென்றிமூவரின் 'சாய்ந்திருக்கும் பெண்' என்ற பெயரிலான நிர்மாணிப்பாகும். ( .......)

❖ **வினா 36 - 40 வரை கீழே தரப்படும் நிழற்படம் தொடர்பாக கேட்கப்படும் வினாக்களுக்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்து புள்ளிக்கோட்டில் இடுக.**



36) 20 நூற்றாண்டில் பிரபல்யம் பெற்ற இவ் ஓவியம் எப்பெயர் கொண்டு அழைக்கப்படுகின்றது?
   (1) மரங்களும் கடிகாரமும்
   (2) தீப்பற்றி ஜிராப்
   (3) நீங்காத கனவு
   (4) அனர்த்தம்
   (5) புஜீமா ( .......)

37) இந்த ஓவியத்தில் படைப்பாளியாக கருதப்படுபவர்
   (1) வான்கோ
   (2) டாலி
   (3) செசான்
   (4) கொகான்
   (5) பிக்காசோ ( .......)

38) இவ்வோவியம் வெளிப்படுத்தும் ஓவியக் (வாதம்) கொள்கை அல்லது முறைமை
   (1) ஒளியியல் வாதம்
   (2) கனவடிவ வாதம்
   (3) நிழலியல் வாதம்
   (4) அகவய யதார்த்த வாதம்
   (5) அரூப வாதம் ( .......)

39) இந்த ஓவியத்தில் முறைமை / பாணி பற்றிய மிகச் சிறந்த கூற்று
   (1) உருவங்கள் வடிவங்கள் கற்பனையானவையாக தோற்றமளித்தல்
   (2) இலகுவில் விளங்கிக் கொள்ள முடியாதவாறு காணப்படல்
   (3) உருவச் சிதைப்பு முறையை அதிகமாகக் கையாளப்பட்டிருத்தல்
   (4) தெரிந்த வடிவங்கள் விநோதமான புனைவுக் காட்சியாக தோற்றமளித்தல்
   (5) உருவங்கள் யதார்த்தமான இயல்புகள் வெளிப்படுத்திக் காட்டுகின்றது ( .......)

40) இந்த ஓவியத்தின் பின்னணி அமைத்தலானது கீழ்வரும் எந்நாட்டு ஓவியங்களின் சாயலை வெளிப்படுத்துகிறது?
   (1) இந்தியா
   (2) யப்பான்
   (3) சீனா
   (4) பிரான்ஸ்
   (5) ஆபிரிக்க பழங்குடிகள் ( .......)

The National e-learning Portal for The General Education

## பகுதி - II

## பகுதி - "அ"

## (சித்திரக் கலை மதிப்பீடும் இரசனையும் - இலங்கை)

**01) "சிகிரிய ஓவியங்கள் படவாக்கற் கலையின் முதிரிச்சி பெற்ற வடிவமாக உலகப் புகழ் பெற்றிருப்பதுடன் கி. மு. 12 ஆம் நூற்றாண்டு வரை இம்மரபு பயன்படுத்தப்பட்டு வந்ததென்பதற்கும் சான்றுகள் உண்டு"**

1) சிகிரிய ஓவியங்களின் பண்புகள் 4 தருக.

2) ஹிந்தகலையில் காணப்பட்ட கி. பி. 7 ஆம் நூற்றாண்டுக்கு மட்டும் உரியதெனக் கருதப்படும் சுவர் ஓவியங்கள் சிகிரிய ஓவியங்களை ஒத்தபாணியை உடையவை. இந்த ஓவியங்களின் பாணி, விடயப் பொருள் பற்றி ஆராய்க.

3) சிகிரிய ஓவியக்கலையின் சாயல் பொலன்னறுவைக் காலத்திலும் காணப்படுகின்ற போதிலும் கருதுகோள் ரீதியில் வேறுபடும் சந்தர்ப்பங்களும் உள்ளன. இக்கூற்றினை திவங்காலய ஓவியங்களை உதாரணங்கள் காட்டி ஆராய்க.

**02) பொலன்னறுவைக் காலத்திலிருந்து இந்து சமய கோயில் கட்டடக்கலை அம்சங்கள் கம்பளைக் காலத்தில் காணப்படுவதுடன் புதிய கட்டட அமைப்புக்களும் உருவாகி உள்ளதைக் காணலாம்.**

1) பொலன்னறுவைக் காலத்து இந்து சமய கோயில் கட்டடக்கலை அம்சங்கள் 4 குறிப்பிடுக.

2) எம்பக்க தேவாலய கலைஞர் தமது கலைத் திறமையை தூண்களின் நடுவில் நாற்கோண செதுக்கல்களில் காண்பித்துள்ளனர். அங்கு காணப்படும் செதுக்கல்களை வகைப்படுத்தி ஒவ்வொன்றுக்கும் இரண்டு உதாரணங்கள் தருக.

3) இக்காலத்தில் அமைக்கப்பட்ட கடலாதெனிய விகாரை தென்னிந்திய விஜயநகர கட்டடக்கலை அம்சங்களையும் பௌத்த கலாசார அம்சங்களையும் இணைப்பதன் ஒரு முயற்சியாகும். விஜயோத்பாய என்ற அம்சத்துடன் தொடர்புபடுத்தி விளக்குக.

## பகுதி - "ஆ"

## (சித்திரக் கலை மதிப்பீடும் இரசனையும் - இந்தியா)

**03) பாறைகளில் கட்டிடங்கள் அமைத்தல் பல்லவர்கள் தென் இந்திய கலைமரபுக்கு அளித்த மிகப் பெரிய பங்களிப்பு ஆகும்.**

1) மாமல்லபுரத்தில் உள்ள பல்லவர்களின் பாறைச் சிற்பக்கலை இரு வடிவங்களைக் கொண்டது. அவை எவை எனக் குறிப்பிட்டு ஒவ்வொரு உதாரணம் தருக.

2) மாமல்லபுரத்தில் காணப்படும் பஞ்சபாண்டவர் ரதக் கோயிலின் கட்டட அம்சங்களை சுருக்கமாக விளக்குக.

3) மிகப் பிரமாண்டமான கோயில்களை பிற்காலத்தில் உருவாக்க பல்லவர்கள் அளித்த மிகப் பெரிய பங்களிப்பினை தஞ்சை பெரிய கோயிலை உதாரணமாகக் கொண்டு விளக்குக.

**04) 16 ஆம் நூற்றாண்டு தொடக்கம் 18 ஆம் நூற்றாண்டு வரை வட இந்தியாவில் தோன்றி வளர்ச்சி பெற்ற மோகல் கலை இராஜ்புட் கலை என்பன சமகாலத்து இரு கலை மரபுகளாகும்.**

1) மோகல் சித்திரக் கலையில் காணப்படுகின்ற முக்கியமான நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.

2) இந்தியாவில் மொகல் கலையை நிலைநிறுத்துவதில் அக்பர் அரசன் முன்னோடியாயிருந்தார். இதற்காக அக்பர் மேற்கொண்ட நடவடிக்கைகளை சுருக்கமாக விளக்குக.

3) இராஜ்புட் சித்திரக்கலையானது அதற்கு சமகாலத்தில் விளங்கிய மொகல் சித்திரக்கலையில் இருந்து எவ் அம்சங்களில் வேறுபடுகின்றன என்பதை ஆராய்க.

## பகுதி - "இ"

## (சித்திரக் கலை மதிப்பீடும் இரசனையும் - ஐரோப்பா)

**05) உரோமர்கள் தமது கலை விருத்தியின் பொருட்டு கிரேக்கர்களிடம் இருந்து பல கலைத் தழுவல்களைப் பெற்றனர். ஆரம்ப காலத்தில் கிரேக்க ஆக்கங்களைப் பின்பற்றிய போதிலும் பின்னர் கட்டடக் கலையிலும் சிற்பக் கலையிலும் பல உன்னத படைப்புக்களை நிர்மாணிப்பதில் உரோமர் வெற்றி பெற்றனர்.**

1) கிரேக்க மேன்மைக்கால சிற்பங்கள் நான்கு தருக.

2) உரோமர்கள் தமது போர் வெற்றிகளை நினைவுகூர்வதற்காகக் கட்டிய கட்டட ஆக்கங்கள் அவர்களின் மதிப்பு மிக்க அமைப்புக்களாகும். அவற்றினைப் பற்றிச் சுருக்கமாக விபரிக்க.

3) உரோமர் ஆரம்பத்தில் கிரேக்கர்களைப் பின்பற்றினாலும் கிரேக்க நிர்மாணிப்புக்களையும் மிஞ்சுமளவிற்குத் திறமை பெற்று முன்னேறிய தன்மையை இவர்களது தலைச் சிலைகளின் மூலம் விமர்சிக்குக.

**06) கி. பி. 330 அளவில் உரோமில் கொன்ஸ்தாந்திநோபிள் நகரத்தில் பைசாந்தியக் கலை என்ற மிகப் புதுமையானதொரு கலைமரபு உருவாகிற்று.**

1) பைசாந்தியக்கலை கலையில் காணப்படுகின்ற முக்கியமான நான்கு பண்புகளைக் குறிப்பிடுக.

2) இம் மரபினுள் மொசாய்க்கலை பிரதான இடத்தை வகித்தது. மொசாய்க் என்றால் என்ன என்பது பற்றிச் சுருக்கமாக விபரிக்குக.

3) 'தியடோறா ராணியும் பணியாளர்களும்' என்பது கவர்ச்சிகரமானதொரு மொசாய்க் படைப்பாகும். இது காணப்படும் இடம் அதன் வெளிப்பாட்டுத் தன்மை, தொகுப்பாக்கம் இங்கு பயன்படுத்தப்பட்ட ஊடகம், இதில் காணப்படும் கலை அம்சங்கள் ஆகியவை தொடர்பில் இதனை மதிப்பிடுக.